**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW-15 | Taluk | : | |
| Name | : | திரு.விஜயேந்திரன் | Occupation | : | |
| Father Name | : | திரு. லோகநாதன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.10.2025**

All accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது பின்னைநல்லூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எண் 22 புளிந்தோப்பு தஞ்சாவூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றியபோது 23.1.2018 அன்று தாலுக்கா காவல் ஆய்வாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீதிமன்றம் மூலமாக போலிஸ் கஷ்டடி எடுத்த சுரேஷ், கலிவரதன் என்பவர்களை விசாரிக்க என்னையும், எனது உதவியாளர் பாபு என்பவரையும் அழைத்தார் நாங்கள் இருவரும் அங்குபோனோம். கலிவரதன் என்பவர் எங்கள் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் எனது உதவியாளர் பாபுவும் சாட்சி கையெழுத்து போட்டோம். அதில் கலிவரதனும் கையெழுத்து போட்டார். கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை அழைத்து சென்றால் எடுத்து காண்பிப்பதாக சொன்னார். அதன் அடிப்படையில் போலிஸார் விளார் பைபாஸ்க்கு அழைத்து போனார்கள், முல்லிவாய்க்கால் முற்றம் அருகே இரண்டு அரிவாளை எடுத்து கொடுத்தார், வல்லம் அய்யனார் கோவில் அருகே ஒரு இருசக்கர வாகனத்தை கலிவரதன் எடுத்து ஆஜர் செய்தார். போலிஸார் அதை கைபற்றிகொண்டார்கள். அதற்கு மகசர் தயார் செய்து கையெழுத்து வாங்கி கொண்டார்கள். திரும்ப காவல்நிலையம் வந்துவிட்டோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து அனுப்பிவிட்டார். கலிவரதன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய 1வது கையெழுத்து **அ.த.சா.ஆ.12** ஆகும். 2வது கையெழுத்து எனது உதவியாளர்

பாபுவுடையது. கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது அது **அ.த.சா.ஆ.13** ஆகும். 2வது கையெழுத்து எனது உதவியாளர் பாபுவுடையது. TN 0A Q8624 என்ற கருப்பு நிற பல்சர் இருசக்கர வாகனம் கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது அது **அ.த.சா.ஆ.14** ஆகும். 2வது கையெழுத்து எனது உதவியாளர் பாபுவுடையது. 28.1.2018அன்று தாலுக்க காவல்நிலைய ஆய்வாளர் நீதிமன்றத்திலிருந்து காவலில் எடுத்த முத்தமிழ் செல்வன் என்பவரை விசாரிப்பதற்காக சாட்சியாக என்னையும், எனது உதவியாளர் பாபு என்பவரையும் அழைத்தார் நாங்கள் இருவரும் அங்குபோனோம். முத்தமிழ்செல்வன் என்பவர் எங்கள் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் எனது உதவியாளர் பாபுவும் சாட்சி கையெழுத்து போட்டோம். அதில் முத்தமிழ்செல்வனும் கையெழுத்து போட்டார். கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை அழைத்து சென்றால் எடுத்து காண்பிப்பதாக சொன்னார். அதன் அடிப்படையில் போலிஸார் பட்டுகோட்டை பைபாஸ்க்கு அழைத்து போனார்கள், ஒரு பழைய மண்டபத்தில் அருகே ஒருஅரிவாளை எடுத்து கொடுத்தார், போலிஸார் அதை கைபற்றிகொண்டார்கள். அதற்கு மகசர் தயார் செய்து கையெழுத்து வாங்கி கொண்டார்கள். திரும்ப காவல்நிலையம் வந்துவிட்டோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து அனுப்பிவிட்டார். முத்தமிழ்செல்வன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய 1வது கையெழுத்து **அ.த.சா.ஆ.15** ஆகும். 2வது கையெழுத்து எனது உதவியாளர் பாபுவுடையது. கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது அது **அ.த.சா.ஆ.16** ஆகும். 2வது கையெழுத்து எனது உதவியாளர் பாபுவுடையது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

தமிழக அரசால் கிராம நிர்வாக அலுவலர் வழிகாட்டி நூல் கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலையம் எந்த கிராமம் என்றால் தெரியவில்லை. கீரைகொல்லை என்றால் இருக்கலாம். புளியந்தோப்பு பகுதியில் அது வரவில்லை என்றால் ஆமாம். நான் தகவல் வந்தவுடன் வட்டாட்சியருக்கு எழுத்து பூர்வமாக தகவல் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நான் நகர்வு பதிவேட்டை பின்பற்றுகிறேனா என்றால் இல்லை. நான் காவல்நிலையம் போனபிறகு கலிவரதன் ஒப்புதல் வாக்குமூலத்தை யார் பதிவு செய்தது என்றால் ஒரு காவலர் இருந்தார் அவர்

எழுதினார், ஒன்று எழுதி வாங்கினார்கள், ஒன்று டைப் செய்து வாங்கினார்கள். நான் காவல்நிலையம் போவதற்கு முன்பாகவே தயார் செய்யபட்டிருந்தது என்றால் இல்லை. என் முன்னிலையில் டைப் செய்யபட்டது என்றால் ஞாபகமில்லை என் முன்பாகதான் எழுதினார்கள். நான் ஆய்வாளர் விசாரணையில் கலிவரதன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் பதிவு செய்து கொண்டார்கள். நான் சொல்வதுபோல் போலிஸார் விசாரித்த வாக்குமூலத்தில் எதுவும் சொல்லவில்லை என்றம் முதன்முதலாக நீதிமன்றத்தில் இன்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் விளார் பைபாஸ்ரோட்டில் அரிவாள் கைபற்றபட்ட இடம் திறந்தவெளி என்றால் ஆமாம் புதர்கள் இருந்தன. முல்லிவாய்க்கால் முற்றத்திலிருந்து அந்த இடம் எவ்வளவு தூரம் என்றால் 200 அடி இருக்கும். கைபற்றுதல் மகசரில் எதிரி கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். நான் கையெழுத்திடும்போது கைபற்றபட்ட பொருள் விபரத்தில் இரண்டு மைகளால் எழுதபட்டிருந்ததா என்றால் ஆமாம். அதை எழுதியது யார் என்றால் ஞாபகமில்லை. வல்லம் அய்யனார் கோவில் அருகே இருசக்கர வாகனம் கைபற்றியதாக உள்ள மகசரில் எதிரியின் கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் சான்று பொருள்கள் கைபற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி வல்லம் என்னுடைய கிராம நிர்வாகமா என்றால் இல்லை. நான் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

28.1.2018 என்பது ஞாயிற்றுகிழமை என்றால் ஆமாம். எனக்கு தகவல் வந்தபோது எங்கிருந்தேன் என்றால் வீட்டிலிருந்தேன். என் வீடு விளார் ரோடு பூக்கார தெருவில் உள்ளது என்றால் ஆமாம். தூரம் 3.50 கி.மீ என்றால் ஆமாம். தாலுக்கா காவல்நிலையம் எனது கிராம நிர்வாக எல்லைகுட்பட்டதல்ல என்றால் சரிதான். தாலுக்கா காவல்நிலையத்தை சுற்றி வீடுகள், கடைகள் உள்ளது என்றால் ஆமாம். நான் வட்டாட்சியருக்கு ஆய்வாளர் அழைத்ததையும் நான் விசாரணைக்கு போனதையும் எதிரி வாக்குமூலம் கொடுத்ததையும் அதன் அடிப்படையில் பொருள் கைபற்றியதையும் எதையும் எழுத்து மூலமாக வட்டாட்சியருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால்

சரிதான். நான் காவல்நிலையத்தில் பட்டியல் சாட்சி என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி முத்தமிழ்செல்வன் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த பொருளும் கைபற்றவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.